இனி இது ரகசியம் அல்ல!

ஜனநாயகப் போராளிகள் கட்சி தொடர்பாக சில இணையத் தளங்களில் வெளிவந்த செய்திகள் குறித்து சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.
ஓர் அரசியல் கட்டமைப்பு என்ற முறையில் பக்கம் 02

பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 29 வியாழக்கிழமை 17.10.2019 கதிர் 346

# ஒன்றிணைந்த 5 தமிழ்க் கட்சிகள் சஜித்துடன் முதலில் பேரப் பேச்சு!

## ஏற்பாடுகள் குறித்து இன்று யாழில் ரணிலுடன் சந்திப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 17

பொது இணக்கப்பாட்டின் கீழ் ஒன்றிணைந்திருக்கும் – தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் 5 தமிழ்க் கட்சிகள் இணைந்து ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, ஐ.தே.க. தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைக் கொழும்பில் சந்தித்துத் தமது கோரிக்கைகளை முன்வைக்கத் தீர்மானித்திருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் முயற்சியால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் 5 கட்சிகள் பொது இணக்கப்பாட்டின் கீழ் ஒன்றிணைந்துள்ளன.

பக்கம் 03

## நகுலேஸ்வரத்தில் ரணில்



யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டுள்ளார்.

பக்கம் 03

## கல்லுண்டாய் வீட்டுத்திட்டத்தை யாழ்.வந்த ரணில் நேரில் பார்வை





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத்துக்கு நேற்று புதன்கிழமை வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுடன்

பக்கம் 03

## நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பொருத்திய சி.சி.ரி.வி. கமராக்கள் அகற்றல்


முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள குருகந்த ரஜமகா விகாரையில் நீதிமன்ற உத்தரவையும் மீறி பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராக்களைப் பொலிஸார்

பக்கம் 03

## யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மைத்திரி - ரணில் இணைந்து இன்று திறப்பர்!

### சென்னையிலிருந்து முதல் விமானம் வருகிறது




யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உத்தியோகபூர்வமாக இன்று வியாழக்கிழமை முற்பகல் திறந்து வைக்கப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்

பக்கம் 03

## ரங்காவைக் கைது செய்ய சட்ட மா அதிபர் உத்தரவு!

கொழும்பு, ஒக். 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவைக் கைது செய்து அவரிடம்

பக்கம் 03

## நாட்டைத் துண்டாடுவதற்கே சஜித்துக்கு சம்பந்தன் ஆதரவு

### வீரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 17

அதிகாரப்பகிர்வின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்துவதற்காகவே தமிழ்த்

பக்கம் 03

## பெரமுனவினால் வெளியிடப்பட்ட தேர்தல் விளம்பரம் மிகத்தவறானது

### மஹிந்த தேசப்பிரிய கண்டனம்

கொழும்பு, ஒக். 17

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவின் புகைப்படம் மற்றும் அறிக்கையைப் பயன்படுத்தி பொதுஜன பெரமுன

பக்கம் 02

## இளைஞர் அடித்துப் படுகொலை; தந்தையும் மகனும் தலைமறைவு



யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் அரியாலைமணியந்தோட்டத்தில் இளைஞர் ஒருவர் கோடாரியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய தந்தையும் மகனும்தலைமறைவாகியுள்ளனர்

பக்கம் 02

## சம்பந்தனை இனிமேலும் தமிழர் நம்பக்கூடாதாம்!

### கிளிநொச்சியில் கூறினார் நாமல் எம்.பி.



கிளிநொச்சி, ஒக். 17

தீபாவளிக்குத் தீர்வு கிடைக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறும் கருத்தை இனியும் தமிழர்கள் நம்பக்கூடாது என நாடாளு

பக்கம் 03

## ஐ.நா. தீர்மானங்களை ஏற்கமாட்டோம் என்று இனிவரும் அரசு கூறுமாயின் விபரீத விளைவு

### எச்சரிக்கிறார் அவைத் தலைவர் சிவஞானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 17

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்கமாட்டோம் என இனிவரும் அரசு கூறுமாயின், தமது

பக்கம் 02

## கோட்டாபயவுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்




வவுனியா, ஒக். 17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாகத் தெரி

பக்கம் 03

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அவரின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ போன்றோரை – இந்த ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாக – ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முக்கிய தலைவர்கள் சந்தித்திருந்தனர்.

அது குறித்து அந்தச் சந்திப்புகள் நடந்த காலத்திலேயே செய்திகள் வெளியாகியிருந்தன. நானும் எனது இந்தப் பத்தியில் அது குறித்து அப்போது பிரஸ்தாபித்திருந்தேன்.

அந்தச் சந்திப்புகள், இப்போதைய தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் – இப்போது சில தினங்களுக்கு முன்னர் – மிக இரகசியமாக நடைபெற்றன என்ற மாதிரியும் –

விடுதலைப்புலிகளை அழித்த மஹிந்த மற்றும் கோட்டாபய சகோதரர்களின் காலடியில் புலிகளின் பெயரால் உருவாகிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர்கள் சரணாகதி அடைந்து விட்டார்கள் என்ற பொருள்படவும் –

இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகின.

உண்மை நிலைவரத்தைக் கடந்த வாரம் எனது பத்தியில் தெளிவுபடுத்தினேன்.

மஹிந்தவையும், கோட்டாபயவையும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் சந்தித்த ஜனநாயகப் போராளிகள் கடந்த திங்களன்று கொழும்பில் அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணிலுடன் அமைச்சர் ரவி கருணாநாயக்காவும் உடனிருந்திருக்கின்றார்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் அதன் தலைவர் வேந்தன், செயலாளர் கதிர், பேச்சாளர் துளசி மற்றும் வவுனியாவைச் சேர்ந்த நெல்சன் ஆகிய முன்னாள் போராளிகள் சந்திப்பில் பங்குபற்றினர்.

அரசியல் கைதிகள் விடுதலை, போரினால் விதவைகளாக்கப்பட்டு வடக்கு, கிழக்கில் அந்தரிக்கும் 89 ஆயிரம் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்குச் செய்ய வேண்டிய அவசர நிவாரண உதவிகள், முன்னாள் போராளிகளுக்கான வேலைவாய்ப்பும் தொழில் முயற்சிக்கான சந்தர்ப்பமும், வடக்கு – கிழக்கில் கடற்றொழிலை ஊக்குவித்தல் ஆகிய விடயங்கள் அடங்கிய விரிவான மகஜர் ஒன்றும் ஜனநாயகப் போராளிகளினால் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்று மேலும் காலம் தாமதிக்கப்படாது வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த மகஜரில் கோரப்பட்டிருந்தது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தற்போதைய நிலைப்பாடு குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினாவினார்.

தாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து – இணைந்து – பயணிக்கின்றனர் என்றும் –

இந்தத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவுக்கு இசைவாக – அமைவாக – தாங்கள் செயற்படுவார்கள் என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் தெரிவித்தனர் என்றும் அறியவந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒத்திசைந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் இயங்குகின்ற போதிலும், கூட்டமைப்புக்குள் தங்கள் பங்களிப்புத் தொடர்பில் அவர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டே செயற்படுகின்றார்கள் என்பதும் தெளிவாகப் புலப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் 'பங்காளிக் கட்சி' என்ற உரிமை ஏதும் கோராமல் – கூறாமல் – கூட்டமைப்புடன் இணைந்து – சேர்ந்து – பயணிக்கின்றோம் என்ற வார்த்தைப் பிரயோகமே அவர்கள் தரப்பில் இருந்து வெளிபடுகின்றது. இதனால் கூட்டமைப்பில் ஜனநாயகப் போராளிகள் அமைப்பு நின்று பிடிக்கும் என்று நம்பலாம் எனத் தோன்றுகின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...!

**- மின்னல் -**



## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிராக ஐ.நா. இலங்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 2015 ஆம் ஆண்டு ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தமாட்டேன் எனக் கருத்து வெளியிட்டுள்ளமை தொடர்பாக ஊடகங்களுக்குத் தகவல் தெரிவிக்கையிலேயே சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை ஐ.நாவின் அங்கத்துவ நாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஐ.நாவில் எடுக்கப்படும் தீர்மானம் இலங்கையைக் கட்டுப்படுத்தும். இலங்கை அரசு காலத்துக்குக் காலம் இது தொடர்பில் முரணான கருத்துக்களையே கூறி வருகின்றது.

ஐ.நாவில் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது இலங்கை அரசு அதனை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருந்தது. பின்னர் காலத்துக்குக் காலம் முரணான தகவல்களைத் தெரிவித்து வருகின்றது. இப்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் தாம் ஜனாதிபதியாக வந்தால் ஐ.நா. தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மாட்டேன் எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு கூறுவது சர்வதேச கட்டமைப்பான ஐ.நாவுடன் முரண்பாட்டு நிலையையே தோற்றுவிக்கும். இதனால் ஐ.நா. இலங்கை அரசுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையும் அதன் உறுப்பு நாடுகளும் தொடர் நடவடிக்கை எடுத்தே தீரும். இப்போது அதனை நாம் ஏற்கமாட்டோம், அதை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உள்நாட்டில் நடைபெற்ற யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய எகத்தாளமான பதில்களைக் கூறியுள்ளார். அவரது கூற்றுக்கள் கண்டிக்கத்தக்கவை.

இலங்கையில் காணாமற்போனோர் விடயம் என்பது வரலாற்று நிகழ்வு. அதனைத் புறந்தள்ளிவிட்டு அபிவிருத்தி என்ற கானல்நீருக்குள் செல்லமுடியாது. காணாமற்போனோர் விடயத்துக்கு பதில் கூறவேண்டும். அத்துடன் நீதியான தீர்வு காணப்பட வேண்டும் – என்றார். (ஐ–07)

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இளைஞனை அவரது மூத்த சகோதரியின் கணவரே கொலை செய்தார். சகோதரியின் கணவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு உண்டு. அந்தப் பெண்ணைத் தேடிச் சென்ற இளைஞன் தனது சகோதரியின் வாழ்க்கையைப் பாழாக்கவேண்டாம் என்று கண்டித்து வந்துள்ளார்.

இளைஞன் தன்னை மிரட்டினார் என அந்தப் பெண் கொலை செய்தவருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

அதனால் சகோதரியின் கணவரின் தந்தை வீதியால் சென்ற இளைஞனைப் பிடித்து வைத்திருக்க சகோதரியின் கணவர் கோடரியால் தலையில் பலமாக அடித்ததுடன், கண்மூடித்தனமாக இளைஞனைத் தாக்கியுள்ளனர்.

கொலை செய்த இருவரும் தலைமறைவாகியுள்ளனர் என்று நீதிவான் முன்னிலையில் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், அரியாலை – மணியம் தோட்டம் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் மணியந்தோட்டம் 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கொன்ஸ்ரன் கலஸ்ரன் (வயது – 33) என்பவரே கொலை செய்யட்டார்.

சம்பவ இடத்துக்கு நேற்றுப் புதன்கிழமை சென்ற யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் விசாரணைகளை முன்னெடுத்தார். அத்துடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள இளைஞரின் சடலத்தையும் நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் இளைஞனின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார். (ஐ–07)

# 673 தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய 673 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 08 ஆம் திகதியில் இருந்து நேற்று முன் தினம் வரை இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 650 முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 6 முறைப்பாடுகளும், வேறு விடயங்கள் தொடர்பில் 17 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன் தினம் மாலை 4.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 85 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மட்டக்களப்பில் இதுவரை ஐந்து முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என, மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் இயங்கி வரும் தேர்தல் மாவட்ட முறைப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## பெரமுனவினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட தேர்தல் விளம்பரம் மிகத் தவறானதெனத் தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

நேற்றுத் தேர்தல்கள் செயலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். இந்த விளம்பரத்தால் தான் வருத்தமடைவதாகவும் அவர் கூறினார்.

வார இறுதிப் பத்திரிகையொன்றில் இராணுவத் தளபதியின் படம், மற்றும் அறிக்கையுடன் விளம்பரம் ஒன்று வெளியாகியிருந்தது. இது குறித்து செய்தியாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரிடம் கேள்வி யெழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த தேசப்பிரிய, கடந்த ஞாயிற்றுக்கிழமை தனக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும், இது குறித்து கோட்டாபய மற்றும் பெரமுனவின் பிரதிநிதிகளுக்கு தெரிவித்தார் என்றும் கூறினார்.

இராணுவத் தளபதியின் படத்தையும் அறிக்கையையும் பயன்படுத்தி வெளியிடப்பட்ட ஊடக அறிவிப்பு குறித்து ஜனாதிபதி செயலகம் மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இனிமேல் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது யுத்த வெற்றி தொடர்பான அறிக்கைகள் வெளியிடப்படாமல் இருப்பது சிறந்தது என வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விளம்பரம் தொடர்பாக இராணுவத் தளபதியே ஒரு அறிக்கையை வெளியிடுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 01 . 1932



இறப்பு 16 . 10 . 2019

### அமரர் பொன்னுச்சாமி தங்கம்மா

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுச்சாமி தங்கம்மா நேற்று (16.10.2019) புதன்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் – லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பென்னுச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சண்முகம், மாணிக்கம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சற்குணம், ஜெயராணி, ஜெயரஞ்சி, கிருஷ்ணவேணி (வவுனியா), மகேஸ்வரி, கிருபாகரன் (சுவிஸ்), கிருபாகுமாரி (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சந்திராசா, மூர்த்தி சித்தன், செல்வராசா, சந்திரதேவா (வவுனியா), காலஞ்சென்ற சிவலிங்கம், ஜெயசோதிலிங்கம் (சுவிஸ்), ஜெயவதனி (சுவிஸ்), சுதாமதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜமோகன் – வினோதினி (லண்டன்), பதுமகாந்தன் – ராஜசுகிர்தா (கனடா), பிரபா – சசிகலா, சந்திரகுமார் – துஷானி, லதாகரன் – நிஷானி, காலஞ்சென்ற சதீஸ் – அருட்செல்வி, சுந்தரமூர்த்தி – பாமிலா, ரசிகரன் – பபிதா, தர்சிகா, மயூரதன் – சுகந்தா (மயூ உணவகம்), கவிநயன் (சுவிஸ்), துவாரகா (சுவிஸ்), துளசிகா (சுவிஸ்), பவித்திரா (சுவிஸ்), செந்தூரன் (சுவிஸ்), கீர்த்தனா (சுவிஸ்), சுபர்த்தனா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஐதுரனா (லண்டன்), கிஷானா (லண்டன்), நிதுஷன் (கனடா), சரணிகா (கனடா), டயனிகா, அபிஷனா, ஐதுஷனா, சர்வின், தனுக்ஷன், டனுஷ்ரிகா, மதுரிகா, யதுரிஷா, அக்ஷனா, கபிஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் காந்தளாம்பிட்டி இந்து மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி, நாவற்குழி.

தகவல்: குடும்பத்தினர்.

காலைக்கதிர் Kalaikathir



## ஒன்றிணைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலையொட்டி தமிழ் மக்களின் அரசியல் உரிமை மற்றும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் மக்களின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம் பேசுவதற்காகவே இந்த இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டது.

இந்த 5 கட்சிகளும் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான கட்சிகளுடன் பேரம் பேசுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் முதலாவது சந்திப்பு ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் நடைபெறவுள்ளது.

இது குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்குத் தகவல் தருகையில் –

யாழ்ப்பாணத்துக்கு நேற்று மாலை வந்த பிரதமர் ரணில் ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளிட்ட பல கட்சிகளைப் பேச்சுக்கு அழைத்திருக்கின்றார். இதற்கமைய இந்தப் பேச்சு இன்று காலை நடைபெறவுள்ளது.

இதன்போது 5 கட்சிகளும் ஒன்றாக இணைந்து ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைக் கொழும்பில் சந்தித்துப் பேசுவதற்காக நேரம் ஒதுக்குமாறு கோரிக்கை விடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் நேரம் ஒதுக்குமாறு கோரவுள்ளார் எனக் கூறினார்.

அவ்வாறு நேரம் ஒதுக்கப்பட்டால் நாங்கள் 5 கட்சிகளும் ஒன்றாக இணைந்து சந்தித்து எங்கள் பொது ஆவணத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்போம். அடுத்த கட்டமாக பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோரையும் சந்திக்கவுள்ளோம். அவர்களிடமும் நேரம் ஒதுக்கித் தருமாறு கோரவுள்ளோம்.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ போர்க்குற்ற விடயம், காணாமல் போனவர்கள் விடயம் மற்றும் ஜெனீவா விடயம் போன்றவற்றில் எங்களிடமுள்ள பொது ஆவணத்தில் நாங்கள் எதிர்பார்த்துள்ளவற்றுக்கு எதிர்மாறான கருத்துக்களையே கூறியிருக்கின்றார். ஆனாலும் அவரிடமும் எங்கள் கோரிக்கையை முன்வைப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம் – என்றார். (ஐ-07)

## நீராவியடிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றியுள்ளனர்.

ஆலயத்தை பௌத்த விகாராதிபதி தரப்பினர் உரிமை கோருவதையடுத்து, இந்த விவகாரத்தில் இடைக்கால உத்தரவாக, ஆலய வளாகத்தில் எந்த தரப்பினரும் புதிய கட்டுமானங்கள் மற்றும் இதர அமைப்புக்களை நிறுவுவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இந்த நிலையில் ஆலய விகாராதிபதி உயிருடன் இருந்த சமயத்தில் சி.சி.ரி.வி. கமரா அமைப்பை நிறுவியிருந்தார். இதையடுத்து, பிள்ளையார் ஆலய நிர்வாகம் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து, நீதிவானின் கவனத்திற்கு இந்த விடயத்தை கொண்டு வந்தனர்.

இதையடுத்து, சி.சி.ரி.வி. கமராவை அகற்றும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், விகாராதிபதி உயிரிழந்ததை தொடர்ந்து மீளவும் அங்கு சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டிருந்தது. இதையடுத்து, பொலிசாரே இந்த விடயத்தில் தலையிட்டு, சி.சி.ரி.வி. கமராக்களை அகற்றியுள்ளனர். (ஐ)

## நகுலேஸ்வரத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் ஒரு பகுதியாகச் செட்டிபுலம் சங்கானை பிரமந்தை வீதி புனரமைப்புப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டமையோடு நேரடியாக பன்னாலை – கீரிமலை வீதி புனரமைப்பு வேலைகளை பார்வையிடுவதற்காகக் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய முன்றிலுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பிரதம குருவைச் சந்தித்து கலந்துரையாடியமையோடு நகுலேஸ்வரர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வது குறித்தும் கலந்துரையாடினார்.

நல்லூர் கோயில் போன்று இந்த ஆலயமும் மிக முக்கியமானது என குறிப்பிட்ட அவர், விரையில் அது புனரமைப்புச் செய்யப்படும் என உறுதி அளித்தார்.

அதனைத் தொடர்ந்து ஏழாலை – கட்டுவன் வீதி புனரமைப்பு பணிகளை பணிகளைப் பார்வையிட்டார், அங்கு அமைக்கப்பட்டுவரும் 53 வீடுகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்துக்கு விஜயம் மேற்கொண்டு பூசை வழிபாடுகளிலும் கலந்துகொண்டார். (ஐ)

## ரங்காவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குமூலம் பதிவு செய்து வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் நிராரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமரசிறி குமார சேனாரத்ன, செட்டிக்குளம் முன்னாள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுகத் ரொஹான் சஞ்சீவ, பொலிஸ் அத்தியட்சகர்களான ஹரிஸ் சந்திர பண்டார மற்றும் அஜித் பிரியதர்ஷன ஹேரத் ஆகியோரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு சட்ட மா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவுக்கு எதிராகச் சட்டக் கோவை 298 கீழ் வழக்கு பதிவு செய்யப்படவுள்ளதாகவும் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில், ஜயமினி புஸ்ப குமார என்ற பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஸ்ரீரங்காவின் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியிருந்தார்.

ஸ்ரீரங்கா உள்ளிட்ட சிலர் மன்னார் நோக்கிப் பயணித்தபோது, செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் இந்த பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரே வாகனத்தைச் செலுத்தினார் எனப் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், ஸ்ரீரங்கவே வாகனத்தைச் செலுத்தினார் என்றும் பொலிஸ் உத்தியோகத்தர் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்தார் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சம்பந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அவர், செய்தியாளர்களிடம் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் வடக்கிலுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டன. இதுபோல எதிர்க்காலத்திலும் நாம் அனைத்து மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

இங்குள்ள மக்களுக்கு இன்னும் வாழ்வாதாரம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

எனினும், நாம் மீண்டும் இந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியவுடன் இலங்கை வாழ் அனைத்து மக்களும் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவோம்.

அத்தோடு, மத்தள விமான நிலையத்தை நாம் அமைத்தோம். எனினும், நாம் அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையம் என்று இதற்குப் பெயரிடவில்லை.

இந்த அரசு பலாலி விமான நிலையத்தை யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்று தற்போது பெயரிட்டுள்ளார்கள். இது முற்றுமுழுதாகத் தேர்தலை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகவே நாம் கருதுகிறோம்.

இந்த விமான நிலையத்தில் ஒரு கட்டடம் கூட நிர்மாணிக்கப்படவில்லை. சுங்க அதிகாரிகள் எங்கு இருப்பார்கள் என்று தெரியாது. சர்வதேச விமான நிலையம் ஒன்றுக்கு இருக்க வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள்கூட அங்கு இல்லை.

ஆனால், வடக்கு மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கேனும் இந்த அரசதரப்பினர் இவ்வாறான அபிவிருத்திகளை மேற்கொள்கிறார்கள் என்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

உண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலையை நினைத்து நாம் கவலையடைகின்றோம். தீபாவளிக்குத் தீர்வு கிடைக்கும் என்று கடந்த 83ஆம் ஆண்டிலிருந்து சம்பந்தன் கூறிக்கொண்டிருக்கிறார். ஆனால், இவர்களால் தமிழர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற இதுவரை முடியாமல்தான் இருக்கிறது. இது முற்றுமுழுதாகத் தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும்.

தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு இவ்வாறான விடயங்களில் தான் இவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதனை மக்கள் உணர்ந்து செயற்படவேண்டும் என்று இவ்வேளையில் நான் கேட்டுக்கொள்கிறேன் – என்றார்.

## கோட்டாபயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக 971ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனரெனஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய நேற்று முன் தினம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த கருத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டே காணமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'அடிமைக்குச் சிறந்த உதாரணம் முத்தையா முரளிதரன்', 'காணாமலாக்கபட்டோருக்கு தீர்வின்றி இலங்கைக்கு நிகழ்காலம் இல்லை' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட காணாமற்போனோரின் உறவுகள் –

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எமது போராட்டங்களை மழுங்கடிக்கும் நோக்குடன் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் நாம் போரின்போது குண்டுத் தாக்குதல்களில் சிதைவடைந்து, உயிரிழந்த பிள்ளைகளைக் கேட்கவில்லை. போர் முடிவடைந்த பின்னர் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட பிள்ளைகளையே கேட்கிறோம்.

ஒவ்வொருவரும் பதவிகளுக்கு வருவதற்காகத் திரிபுபடுத்தபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

எமது பிள்ளைகள் இல்லை என்றால் அதனைக் கடந்த 2010ஆம் ஆண்டு 'பரணகம' ஆணைக்குழு வவுனியாவுக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டபோதே தெரிவித்திருக்கவேண்டும்.

எம்மிடம் முழுமையான ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே எமது பிள்ளைகள் இல்லை என்று யாருமே கூறவேண்டாம் – என்றனர். (ஐ)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து திறந்துவைக்கின்றனர்.

சிவில் விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய அதிகாரிகள் உள்ளிட்ட தரப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவின் அடையாளமாகச் சென்னை விமான நிலையத்திலிருந்து முதலாவது விமானம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்குகிறது.

எயார் இந்தியாவின் அலையன்ஸ் எயார் விமானமே இவ்வாறு பயணத்தை மேற்கொள்கிறது. அந்த விமானத்தில் எயார் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் அஸ்வானி லோகானி மற்றும் இந்திய வெளியுறவுத் துறை மூத்த அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

இவர்களை வரவேற்கும் நிகழ்வில் ஜனாதிபதியும், பிரதமரும் பங்கேற்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் விமான நிலையம் திறக்கப்பட்டதும் சென்னை உள்ளிட்ட இந்திய நகரங்களில் இருந்து வாரத்தில் மூன்று சேவைகளை நடத்தவுள்ளதாக அலையன்ஸ் எயார் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளார் என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் மும்பை, பெங்களூர் மற்றும் கொச்சின் ஆகிய நகரங்களுக்கே விமான சேவையை நடத்த இந்திய அரசு அனுமதியளித்திருந்தது.

எனினும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு சென்னை விமான நிலையத்துக்கான விமான சேவையே என யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் உள்ளிட்ட தரப்புகள் முன்வைத்த யோசனைக்கு இந்திய அரசு அனுமதியளித்துள்ளது.

இதனால் சென்னை மற்றும் திருச்சி விமான நிலையங்களுக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வாரத்துக்கு 3 விமான சேவைகளை நடத்த அலையன்ஸ் எயார் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னை விமான நிலையத்துக்கு விமான சேவைகளை ஆரம்பிக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை திட்டமிட்டுள்ளது. (ஐ)

## நாட்டைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாக சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் நாட்டில் ஒற்றுமையையே எதிர்பார்க்கின்றோம். அதுவே எமது இலக்காகும். கூட்டமைப்பு அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அரசமைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வுக்கான யோசனைகள் ஆகியவற்றிலேயே கவனம் செலுத்தியிருக்கிறது.

தேர்தல் நிறைவடைந்த பின்னர் ஏதேனுமொரு காரணத்தைக் கூறிக் கொண்டு ஏதாவதொரு தரப்பு ஆதரவளிக்கும். இந்த நிலைமையை மாற்றியமைக்குமாறு வடக்கு – கிழக்கு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## கல்லுண்டாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று கல்லுண்டாய்வெளியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டார்.

கல்லுண்டாய்வெளியில் மீள் குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 80 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இந்த வீட்டுத்திட்டத் தொகுதி அண்மையில் அந்த அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு ஏற்கனவே கையளிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தைப் பார்வையிடுவதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அங்கு சென்றிருந்தார்.

பிரதமருடன், அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன், ஈ.சரவணபவன், சிவமோகன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் உள்ளிட்டவர்களும் சென்றிருந்தனர்.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இந்த வீட்டுத்திட்டத்தை அமைத்துத் தந்த ரணில் விக்கரமசிங்கவுக்குப் பயனாளிகள் சார்பில் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தமிழருக்கு மறுக்கப்படும் நீதி

இந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய, வேட்புமனுத் தாக்கலின் பின்னர் நேற்று முன்தினம் தாம் நடத்திய முதலாவது செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துகள் நாட்டு மக்களுக்கு சில பாடங்களை உணர்த்தியதோ இல்லையோ, சர்வதேச சமூகத்துக்கு சில கடப்பாடுகளை – பொறுப்புகளை – நிச்சயம் நினைவூட்டியிருக்கும் என்று நம்பலாம்.

யுத்த காலத்திலும், பின்னர் இப்போது வரையிலும், இலங்கைத் தீவின் சிறுபான்மை இன மக்களான தமிழர்கள் அனுபவித்த – அனுபவித்து வருகின்ற – துன்ப, துயரங்கள், கஷ்ட நஷ்டங்கள் சொல்லி மாளாதவை; எழுத்தில் வடிக்க முடியாதவை.

இவற்றிலிருந்து மீள்வதற்கு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய விடயங்கள் அளவிட முடியாதவை.

தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணுதல், வன்முறைகள் மற்றும் போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு உரிய நஷ்ட ஈடுகள், நிவாரணங்களை வழங்குதல், இராணுவ ஆக்கிரமப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணி, பூமிகளை விடுவித்தல், பௌத்த மயமாக்கலில் இருந்து தமிழர் தாயகத்தைப் பாதுகாத்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், மனிதாபிமானமற்ற, கொடூரச் சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல், காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், கொடூரங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துதல், தாமதமின்றி இழப்பீடுகளை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் விரைந்து ஒளியேற்றுதல் என்று இந்த அம்சங்கள் பலப் பல.

ஆனால், இவையாவற்றையும் விட, தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய மிக மிக முக்கியமான ஒரு விடயம் உண்டு.

அது, அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் நீதியை நிலை நாட்டுதலும், பொறுப்புக் கூறலை முழு அளவில் நடைமுறைப்படுத்தலும் ஆகும்.

யுத்தம் முடிந்து பத்துவருடங்கள் கழிந்தும் இந்த விடயத்தில் கிஞ்சித்தும் முன்னேற்றம் இல்லை என்பதுதான் வேதனையிலும் வேதனை.

தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான செயன்முறை மீறல்கள் போன்றவற்றிலும் யுத்தக் குற்றங்களிலும் ஈடுபட்டவர்கள் ஒரு புறம் சுதந்திர மனிதர்களாக உலாவருகின்றனர். மறுபுறம் அக்குற்றங்களை இழைத்தோர் தேசிய வீரர்களாகவும், நாட்டின் சுதந்திரத்தை மீட்ட புருஷர்களாகவும் மதிக்கப்படுகின்ற அவலட்சணமும் தொடர்கின்றது.

இத்தகைய கொடூரக் குற்றங்கள் இழைத்தமை தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட்டு, பொறுப்புக் கூறல் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு சர்வதேசப் பங்களிப்புடன், ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையும் சேர்ந்து நிறைவேற்றிய தொடர் தீர்மானங்கள் ஏதும் வழி செய்யும் என்ற நப்பாசை – நம்பிக்கை – பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்கு ஒரு துளியளவு இருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ அளித்த முதல் ஊடகப் பேட்டி, இந்தத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றால் அதற்கும் கூட வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

நீதி முறைமைகள், சர்வதேசச் சட்டங்கள், ஒழுக்க விதிகள், நீதி பரிபாலன முறைமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் நீதி நிலைநாட்டப் படவேண்டும். நிலைநாட்டப்பட முடியும்.

எண்ணிக்கை கூடியவர்களின் தீர்மானமே முடிவு என்ற ஜனநாயகக் கேலிக்கூத்து முறைமையின் அடிப்படையில் நீதி பரிபாலிக்கப்பட முடியாது.

ஆனால், இலங்கையில் அதுதான் முறைமையாகப் பின்பற்றக் கூடிய அவல நிலைமையே நீடிக்கின்றது.

தமிழர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் உட்பட்ட மோசமான கொடூரங்களுக்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் மூலம், காலம் பிந்தியாவது நீதி கிடைக்கும் என ஒரு கொஞ்ச நம்பிக்கையுடனாவது காத்திருந்தனர்.

ஆனால், இந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றால், அந்த ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானங்களைத் தாம் தூக்கிக் கடாசி எறிந்து விடுவார் – அடியோடு நிராகரித்து விடுவார் – என்றெல்லாம் வெளிப்படையாகவும், திட்டவட்டமாகவும் அறிவித்திருக்கின்றார் கோட்டாபய ராஜபக்ஷ.

அதாவது, மேற்படி ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானங்களின் மூலம் காலம் பிந்தியாவது தமிழர்களுக்கு நீதி கிட்டுவது என்பது இப்போது இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வாக்குகளின் பேசுபொருளாகவும், அந்த வாக்களிப்பு முடிவில் அதன் எதிர்காலம் தாங்கியிருப்பதாகவும் மாறியிருக்கின்றது.

அதாவது, இலங்கையின் இந்த ஜனநாயகத் தேர்தலில், அதிக எண்ணிக்கையான மக்கள் கோட்டாபயவுக்கு வாக்களித்தால் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் மூலம் தமிழர்களுக்கு நீதி கிட்டுவது தூக்கிக் கடாசப்பட்டு விடும் என்ற நிலைமை.

வேறுவார்த்தைகளில் கூறுவதானால், தமிழர்களுக்கு நீதி கிட்டுவது என்பது, நீதிமுறைமையின் அடிப்படையில் அல்லாது, வாக்களிப்போரின் எண் ணிக்கையில் தங்கியிருக்கும் பேரவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

# இலங்கையில் ஆகக்கூடுதல் வாக்காளர்கள் கம்பஹாவில்

கொழும்பு, ஒக். 17

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக கம்பஹா மாவட்டத்திலிருந்து 17லட்சத்து 51ஆயிரத்து 892 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் என கம் பஹா பிரதித் தேர்தல் ஆணையாளர் கே.ஜே.எப். மாதவ தெரிவித்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள 17,24,309 வாக்காளர்களை விடவும், 2018’ஆம் ஆண்டில் 27,583 வாக்காளர்கள் மேலதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் மஹர தேர்தல் தொகுதியிலேயே ஆகக்கூடுதலான வாக்காளர்களும், களனி தொகுதியில் மிகக் குறைந்த வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மஹர தொகுதியில் 1,61,630 வாக்காளர்களும், களனி தொகுதியில் 95,290 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மஹர தொகுதிக்கு அடுத்தபடியாக, கம்பஹா 1,57,350, கட்டான 1,55,996, ஜா – எல 1,55,657, மினுவாங்கொடை 1,42,378, அத்தனகல்ல 141544, வத்தளை 1,32,219, மீரிகம 1,32,219, பியகம 1,31,264 தொம்பே 1,22,912, திவுலப்பிட்டிய 1,14,107, நீர்கொழும்பு 1,11,326 வாக்காளர்கள் இம் முறை முறையே பதியப்பட்டுள்ளன எனப் பிரதித் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கம்பஹா மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கம்பஹா மாவட்டத்தில் 1,171 வாக்களிப்பு நிலையங்களும், கம்பஹா தொகுதியில் மாத்திரம் 107 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன எனவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# கோட்டாபய ஆதரவுக் கருத்து விளம்பரம்; ராணுவத் தளபதியிடம் விளக்கம் கோரல்

கொழும்பு, ஒக். 17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா வெளியிட்ட கருத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட விளம்பரங்கள் தொடர்பாக இராணுவத் தளபதியை ஒரு வாரகாலத்துக்குள் விளக்கமளிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

ஒரு வாரத்துக்குள் விளக்கமளிக்காவிடின் இராணுவத் தளபதி அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டார் எனவே கருதப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வார இறுதி ஞாயிற்றுக்கிழமை நாளிதழ்களில் வெளியிடப்பட்ட முழுப்பக்க விளம்பரங்களில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாளர் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் இடம்பெற்றன.

அதில், அவருக்கு ஆதரவாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா வெளியிட்டுள்ள கருத்தும் இடம்பெற்றது. அந்த விளம்பத்தில், தற்போதைய இராணுவத் தளபதி என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேவேளை, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சார்பாக வெளியிட்ட கருத்துக்களும் அதில் இடம்பெற்றிருந்தன. அதில் முன்னாள் படைத் தளபதிகள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா 2009ஆம் ஆண்டு வெளியிட்ட கருத்தை, பொதுஜன பெரமுன தமது தற்போதைய அரசியல் பரப்புரைக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பது நெறிமுறையற்றது என்று சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரைக்குப் பொறுப்பாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் சட்ட மீறல் குறித்து குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும், முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் ஞாயிறு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தண்ணீர்த் தாங்கி எதிரில் உள்ள தனிநாயகம் முற்றத்தில் அமைந்துள்ள அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் வணக்கம் இடம்பெறும். தமிழ் வாழ்த்தை புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர் இசைப்பர். திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை மாணவிகள் வரவேற்பு நடனத்தை வழங்குவர். தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் நா.வை. மகேந்திரராசா வரவேற்புரையையும் சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தொடக்கவுரையையும் ஆற்றுவர்.

இயற்கையால் எழிலுறும் இலக்கியங்களும் இலக்கியங்களால் உயிர்ப்புறும் இயற்கையும் என்ற பொருளில் சியன தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் துணைவியூர் சி. கேசவன் நினைவுப் பேருரை ஆற்றுவார்.

சிறப்பு நிகழ்வாக தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த விவாதச் சுற்றுப் போட்டியின் திறந்த பிரிவுக்கான இறுதிப் போட்டி நடைபெறும். இனியும் இவ்வினம் உய்யும் வழி உண்டு – இல்லை’ என்ற பொருளில் நடைபெறவுள்ள இவ்விவாதப் போட்டியில் தேசக்கவி புதுவை இரத்தினதுரையின் பெயரால் அமைந்த அணியும் மகாகவி உருத்திரமூர்த்தி பெயரால் அமைந்த அணியும் பங்கேற்கவுள்ளன. வெற்றி பெற்றோருக்கான வெற்றிக் கேடயத்தை தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்கவுள்ளார். (ஐ)

# கோட்டாவின் விஞ்ஞாபனம் 25ஆம் திகதி

*கொழும்பு, ஒக். 17*

*ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளது.*

*எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவித்துள்ளார்.*

*எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த தலைமையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.*

*தேர்தல் விஞ்ஞாபனத்தை இறுதி செய்யும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.*

*எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் மும்முரமாக தேர்தல் பிரசார நடவடிக்கை ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*

## நாளை

18.10.2019
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: ரோகிணி பி.ப 4.09 வரை
திதி : சதுர்த்தி காலை 6.09 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02
சுப நேரம் : 6.02 – 7.32

# ராணுவ வாகனத்துடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத்து



முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு– கொக்காவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இராணுவத்தினரின் வாகனமொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏ – 9 வீதியில் கொக்காவில் பகுதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்திய நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இராணுவத்தினரின் வாகனத்தை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். (ஐ)

# ஓய்வின் பின்பும் மைத்திரிக்கு சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஓய்வின் பின்னரும் சிறப்பு பாதுகாப்பு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்தோடு தற்போது வசிக்கும் உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர் ஓய்வின் பின்னரும் வசிக்கவும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தலை தடுக்க ஜனாதிபதி எடுத்த அதிரடி நடவடிக்கைகள் காரணமாக, ஓய்வின் பின்னர் ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென தெரிவித்தே இவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது வசிக்கும் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஓய்வின் பின்னரும் வசிக்க அனுமதிக்கும் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்தார். இதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. (ஐ)

# தேர்தல் உத்தியோகபூர்வ முடிவு நவ. 18 நண்பகலே வெளியாகும்

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதித் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவு நவம்பர் மாதம் 18ஆம் திகதி நண்பகல் 12 மணியளவிலேயே வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நடைபெறுகின்ற போதும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவு நவம்பர் 18ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கே வெளியிடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# கோமாளி வேடம் போடும் ஹக்கீம் ஹிஸ்புல்லாவை துரோகி என்பதா?

## மயோன் முஸ்தபா சீற்றம்

மட்டக்களப்பு, ஒக். 17

கிழக்கில் கோமாளி வேடம் போட்டுத் திரியும் ஹக்கீம் ஹிஸ்புல்லாவை துரோகி எனக் கூற முடியாது என்கிறார் முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஸவை ஆதரித்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் 9 மணிவரை முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் எம்.எம்.மயோன் முஸ்தபாவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் கலந்துரையாடல் கல்முனை வரவேற்பு மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் தான் முஸ்லிம் மக்களுக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல இடம்பெற்றன. ஆனால் இன்று முஸ்லிம் மக்களது இருப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவினால் கொண்டு வரப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கான அனுமதி முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது. ஆனால் இன்று அந்தப் பல்கலைக்கழகத்தைத் திறக்க முடியாத நிலை காணப்படுவதை அவதானிக்கலாம்.

2015இல் அளுத்கமவில் இடம்பெற்ற இனக்கலவரத்தை இரவோடு இரவாக அமைதிக்கு கொண்டுவந்ததும் எமது முன்னாள் ஜனாதிபதி மஹிந்ததான். இவ்வாறான காலகட்டத்தில் முஸ்லிம் மக்களது பாதுகாப்பை இல்லாமல் செய்தவர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான். குறிப்பாக 18ஆம் திருத்தத்துக்கு ஆதரவாகக் கைகளைத் தூக்கியவர்களும் இவர்கள் தான். ஆகவே 2015 வரை இடம்பெற்ற அனைத்து அசம்பாவிதங்களுக்கும் பொறுப்பு கூறவேண்டிய கடப்பாடு இவர்களுக்கு உண்டு.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவுக்கு எதுவித ஒப்பந்தங்களும் இன்றித் தமது ஆதரவை தெரிவித்துக்கொண்டு முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றிக் கொண்டு வரும் நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவை பகிடி பண்ணிக் கொண்டு கோமாளியாகத் திரிகின்றார். போராட்டம் போராட்டம் என்று கூறுகிறார் இவர். முஸ்லிம் காங்கிரஸின் போராட்டத்தின் வெற்றி என்ன? எதற்காக இந்தப் போராட்டம்? வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு இந்த போராட்டத்தின் மூலம் கிடைத்த நன்மை தான் என்ன? ஒன்றுமில்லை. பழைய பாடல் பாடும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள் எதுவித தகுதியுமற்றவர்கள் என்பதைக் கூற விரும்புகின்றேன் – என்றார். (ஐ)

# அரச ஊழியர்கள் பேஸ்புக் ஊடாகவும் தேர்தல் பரப்புரையில் ஈடுபடத் தடை!



கொழும்பு, ஒக். 17

மருத்துவர்கள் உட்பட அரச ஊழியர்கள் அனைவரும் அரசியல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் தமது பிரத்தியேக பேஸ்புக் ஊடாக வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக பரப்புரை முன்னெடுப்பதும் வேட்பாளர் ஒருவரை விமர்சிப்பதும் தேர்தல் விதி மீறலாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் மதத் தலைவர்கள் தங்கள் மத நடவடிக்கைகளில் வேட்பாளர்களை ஊக்குவிப்பது அல்லது விமர்சிப்பது தேர்தல் மீறல்களாகக் கருதப்படும் என்றும் தேர்தல் ஆணையக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

# அரசியலில் முரளி ஈடுபடாராம்!

கொழும்பு, ஒக். 17

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நுவரெலியா மாவட்டத்தின் அமைப்பாளராகும் எந்தவிதமான முயற்சிகளையும் தான் முன்னெடுக்கவில்லை என முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா தேர்தல் மாவட்டத்தின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரனை நியமிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வதந்திகள் பரவின.

இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே முரளிதரன் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# உதுமாலெப்பை – ஜெமீல் மு.காவுடன் சங்கமித்தனர்

கொழும்பு, ஒக். 17

தேசிய காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை அமைச்சருமான உதுமாலெப்பை மற்றும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெமீல் ஆகியோர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கொண்டனர்.

நேற்று தாருஸ்ஸலாமில் இந்த நிகழ்வு நடந்தது. (ஐ)



# மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 16

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில்-**

செட்டிகுளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

தலை மன்னரா் கிராமம், படப்பாடி, தலை மன்னார் Palmyra house ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# இந்திய விவசாயிகளுக்குச் சொந்தமான நீர் இனி பாக். பக்கம் செல்லவிடாமல் தடுப்போம்

## பிரதமர் மோடி சூளுரை

சண்டிகர்,ஒக்.17

இந்திய விவசாயிகளுக்கு சொந்தமான நீர் இனி பாகிஸ்தான் பக்கம் செல்லவிடாமல் தடுப்போம் என இந்தியப் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பு இந்தியா - பாகிஸ்தான் இடையே மற்றொரு சுற்றுக் குழப்பத்துக்கு வழிகோலும் எனக் கருதப்படுகிறது.

அரியானா மாநிலத்தில் உள்ள 90 சட்டசபை தொகுதிகளுக்கு வரும் 21ஆம் திகதி தேர்தலும், 24 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கையும் நடக்கிறது. இதற்கான தேர்தல் பிரசசாரத்தில் காங்கிரஸ், பா.ஜ.க. ஆகியன தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையில், அரியானாவில் உள்ள சார்கி தாத்ரி எனும் இடத்தில் பா.ஜ.க. சார்பில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

அரியானா மாநில மக்களின் அன்பு என்னை ஈர்த்து உள்ளது. இந்த ஆண்டில் அரியானா மாநிலத்தில் இரண்டு தீபாவளிகள் கொண்டாடப்பட உள்ளன. ஒன்று மண் விளக்குகளில் தீபம் ஏற்றுவது. மற்றொன்று தேர்தலில் பா.ஜ.க. பெறும் வெற்றியைக் கொண்டாடுவது.

நம்முடைய தீபாவளியை நமது வீட்டில் உள்ள பெண் குழந்தைகளுக்கு அர்ப்பணித்து அவர்களின் சாதனைகளைப் போற்ற வேண்டும்.

கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவுக்குச் சொந்தமான நீர் - அரியானா விவசாயிகளுக்குச் சொந்தமான நீர் - பாகிஸ்தானில் பாய்கிறது. இந்த நீரைத் தடுத்து நிறுத்தி உங்களுடைய நிலங்களுக்கும், வீடுகளுக்கும் அது கொண்டு வரப்படும்.

பாகிஸ்தானில் பாயும் நீரைப் பெறுவதற்கு அரியானா, ராஜஸ்தான் மாநில மக்களுக்கு அதிக உரிமை உள்ளது. இந்த நீரை இதற்கு முன் ஆட்சி செய்த அரசுகள் தடுத்திருக்க வேண்டும். ஆனால் இனிமேல் உங்கள் போராட்டத்தில் உங்களுக்காக மோடியாகிய நான் போரிடுவேன்.

ஜம்மு காஷ்மீரில் கடந்த 70 ஆண்டுகளாக நீடித்து வந்த பயங்கரவாதத்தை, 370 பிரிவை நீக்கியதன் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த முடிவை நாட்டில் உள்ள அனைவரும் பாராட்டுகிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியில் உள்ள சில தலைவர்கள், மக்களிடமும், உலக நாடுகளிடமும் பொய்யான தகவல்களைப் பரப்புகிறார்கள்.

எதிர்க்கட்சிகளிடம் கேட்கிறேன். உங்களுக்குத் துணிச்சல் இருந்தால் மீண்டும் அரசமைப்பு 370 ஆம் பிரிவை திரும்பக் கொண்டுவர முடியுமா?

அரியானாவுக்கு மீண்டும் சேவை செய்ய பா.ஜ.க.



முடிவு செய்துவிட்டது. மக்களும் எங்களுக்கு வாய்ப்பு வழங்க முடிவு செய்து விட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

- இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

சிந்து மற்றும் 5 துணை ஆற்று நீரை பகிர்ந்து கொள்ள இந்தியாவும், பாகிஸ்தானும் 1960 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன்படி பியாஸ், சட்லெஜ், ராவி ஆகிய மூன்று ஆற்று நீரை இந்தியாவும், சிந்து, ஜீலம், ஜீனாப் ஆகிய ஆறுகளின் நீரை பாகிஸ்தானும் பயன்படுத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

இதில் இந்திய ஆறுகளில் உள்ள தண்ணீரை காஷ்மீர், அரியானா, ராஜஸ்தான் மாநிலங்களுக்கு மூன்று திட்டங்களின் மூலம் கொண்டு செல்ல இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்க சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. முதல்வர் வேட்பாளர் கங்குலி?



பி.சி.சி.ஐ. எனப்படும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவராக இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி போட்டியின்றித் தேர்வு பெற்றார்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை , கங்குலி மும்பையில் சந்தித்தார்.

இதை வைத்து, வரும் 2021 ஆம் ஆண்டு நடக்க உள்ள மேற்குவங்க சட்டசபை தேர்தலில் பா.ஜ. சார்பில் முதல்வர் வேட்பாளராக கங்குலி முன்னிறுத்தப்படலாம் எனச் செய்திகள் வெளியாயின.

இது குறித்து மத்திய அமைச்சர் அமித்ஷா கூறுகையில் -

விதிகளின் அடிப்படையில் கங்குலி பி.சி.சி.ஐ. தலைவர் பதவிக்குத் தேர்வு பெற்றுள்ளார். மேற்கு வங்க சட்டசபை தேர்தலை மனதில் வைத்து கங்குலியிடம் நான் பேரம் பேசினேன் என வெளியான செய்தியில் உண்மையில்லை.

யாருடைய தயவும் இல்லாமல் நாடாளுமன்றத் தேர்தலில் மேற்குவங்கத்தில் 18 இடங்களில் நாங்கள் வெற்றி பெற்றோம். கங்குலியிடம் எந்த ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. அவர் விரும்பினால் பா.ஜ. கவில் சேரலாம். -என்றார்.

## கல்கி பகவானின் ஆசிரமங்களில் நேற்று வருமானவரிச் சோதனை!

சென்னை,ஒக்.17

பிரபல சாமியார் கல்கி பகவானின் ஆசிரமம் உள்ளிட்ட 40 இடங்களில் வருமானவரி சோதனை நேற்றுப் பகல் நடைபெற்றது.

சென்னை - ஆந்திர எல்லையில் அமைந்துள்ள கல்கி ஆசிரமம், ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் வரதபாளையத்தில் உள்ள கல்கி ஆசிரமம் மற்றும் சென்னை உள்ளிட்ட கல்கி ஆசிரமம் தொடர்புடைய 40 இடங்களிலும் வருமானவரித்துறை சோதனை நேற்று நடைபெற்றது.




## பாகிஸ்தானின் ஆள் இல்லா விமானங்கள் மீண்டும் இந்திய எல்லைப் பிரதேசத்தில்!

சண்டிகர்,ஒக்.17

இந்தியாவின் பஞ்சாப் எல்லைப் பகுதியில் பாகிஸ்தானின் ஆள் இல்லா விமானம் மீண்டும் பறந்து உள்ளது.

கடந்த ஒரு வாரத்திற்கு முன் பஞ்சாபின் ஃபெரோஸ்பூருக்கு அருகே ஆள் இல்லா ஒரு விமானம் காணப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு, பாகிஸ்தானைச் சேர்ந்த மற்றொரு ஆள் இல்லா விமானத்தை பஞ்சாபின் எல்லைக்கு அருகில் வசிக்கும் கிராம மக்கள் கண்டுள்ளனர்.



கடந்த திங்கட்கிழமை இரவு பாகிஸ்தானின் ஆள் இல்லா விமானம் ஒன்று இந்தியா - பாகிஸ்தான் எல்லை கிராமங்களான ஹசாரா சிங் வாலா மற்றும் பக்டி ஆகிய இரு கிராமங்களின் மேல் பறந்து கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

நேரில் பார்த்த உள்ளூர்வாசிகள் கூறும்போது, ஆள் இல்லா விமானம் பாகிஸ்தான் பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் வரை இந்திய வான் வெளியில் நுழைந்தது. ஆள் இல்லா விமானம் எல்லை பாதுகாப்பு படை கோபுரத்திற்கு அருகிலும், சட்லெஜ் நெல் வயல்களிலும் பறந்து கொண்டிருந்தது. பின்னர் அது எல்லையைத் தாண்டியது, மீண்டும் கண்டுபிடிக்க முடியவில்லை. - எனக் கூறினர்.

பொலிஸாரும், எல்லைப் பாதுகாப்புப் படையினரும் தேடுதல் நடவடிக்கையைத் நடத்தினாலும் அந்த ஆள் இல்லா விமானத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எந்தவொரு பாகிஸ்தான் ஆள் இல்லா விமானமும் இந்திய வான்வெளியில் பறந்தால் சுடப்படும் என்று இந்திய இராணுவ அதிகாரிகள் முன்பு கூறியிருந்தனர்.

# பறக்க முடியாத பட்டாம்பூச்சிக்கு இறக்கை மாற்று முயற்சி வெற்றி!



கன்சாஸ்,ஒக்.17

அமெரிக்காவில் சிறகு பழுதான தால் பறக்க முடியாமல் தவித்த பட்டாம்பூச்சிக்கு புதிய இறக் கையை வழங்கிய பெண்ணுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

கான்சாஸ் நகரத்தைச் சேர்ந்தவர் கட்டி வேன்பெலாரிகம் இவர் அப்பகுதியில் பறக்கமுடியாமல் தவித்த பட்டாம்பூச்சியைக் கண்டார். பின்னர் அதனைப் பிடித்து பழுதான இறக்கையை வெட்டி அகற்றினார் கட்டி.

இறந்துபோன மற்றொரு பட்டாம்பூச்சியின் இறக்கையை எடுத்து இந்தப் பூச்சியின் இறக் கையுடன் ஒட்டினார். பசை காய்ந்த உடன் அந்தப் பூச்சி உற்சாகமாக சிறகடித்து உல்லாசமாகப் பறக்கத் தொடங்கியது. கட்டியின் இந்தச் செயலுக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

# துருக்கி நடத்திய தாக்குதலில் 595 குர்திஷ் போராளிகள் பலி



சிரியாவில் உள்ள குர்திஷ் போராளிகள் மீது துருக்கி ராணுவம் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 595 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள குர் திஷ் மக்களை குர்திஷ் மக்கள் பாதுகாப்புப் படை என்ற போராளிகள் அமைப்பு பாது காக்கிறது.

சிரியாவில் இருந்த ஐ.எஸ். பயங்கரவாதி களை ஒழித்துக் கட்டுவதில் அமெரிக்க படைகள் மற்றும் சிரிய கிளர்ச்சிப் படைகளுடன் இணைந்து குர்திஷ் போராளிகள் குழு போரிட்டது. மேலும், பிடிபட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் குர்திஷ் மக்கள் பாதுகாப்பு படையினின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த போராளிகள் குழு தனி நாடு அமைக்கும் நோக்கில் சிரியாவில் குர்திஷ்தான் தொழிலாளர்கள் கட்சி என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்நாட்டின் எல்லையில் இருந்து துருக்கி மீது அவ்வப்போது தாக்குதல் கள் நடத்தி வந்தது.

இந்தத் தனி நாடு கோரிக்கையை விரும்பாத துருக்கி அதிபர் தாயீப் எர்டோகன் தங்கள் நாட்டிலும் சிரியாவிலும் செயல்பட்டு வரும் குர்திஷ்தான் தொழிலாளர்கள் கட்சியை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதை இலக்காக கொண்டவர்.

இதற்கிடையில், சிரியாவின் வடக்கு பகுதி யில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறுவதாக அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க படைகளை திரும்பப்பெறுவதாக டிரம்ப் அறிவித்ததையடுத்து துருக்கி அதிபர் எர்டோகனின் உத்தரவில் அந்நாட்டு ராணுவம் 'அமைதி வசந்தம்' என்ற பெயரில் சிரியா நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்து குர்திஷ் போராளிகள் மீது கடுமை யான தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தத் தாக்குதலுக்கு குர்திஷ் போராளிகள் பதிலடி கொடுத்து வருகின்றனர். ஆனால், துருக்கியின் ஆக்ரோமான தாக்குதலுக்கு பயந்து குர்திஷ் மக்கள் லட்சக்கணக்கானோர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில், சிரியாவின் வடக்கு பகுதி யில் அக்டோபர் 9 முதல் கடந்த ஒரு வாரம் ராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 595 குர்திஷ் போராளிகள் கொல்லப்பட்டனர் என துருக்கி ராணுவம் தெரிவித்துள்ளது.



இதற்கிடையில், தங்கள் நாட்டு எல்லைக்குள் புகுந்து குர்திஷ்கள் மீது துருக்கி நடத்தும் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக சிரிய நாட்டின் அரசுப்படைகள் எல்லைப் பகுதிக்கு விரைந்துள்ளன. இதனால் சிரியா மற்றும் துருக்கி இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது.

# மேலாடையின்றிப் புகைப்படம் பிரசுரித்து சர்ச்சையில் சிக்கிய பாடகி மர்ம மரணம்!

மேலாடை இன்றி படம் வெளி யிட்டு சர்ச்சையில் சிக்கிய தென் கொரியாவை சேர்ந்த பிரபல 'பொப்' பாடகி சுல்லி மர்மமான முறையில் மரணம் அடைந்தார்.

தென்கொரியாவை சேர்ந்த பிர பல 'பொப்' பாடகி சுல்லி (வயது 25). இவர் வெப்சீரிஸ் எனப்படும் இணைய தொடர்களில் நடித்தும் புகழ்பெற் றவர். பாடகி, நடிகை என்பதை தாண்டி சர்ச்சைக்குரிய கருத்துகள்



மற்றும் பதிவுகள் மூலம் இன்ஸ்டா கிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்களி லும் பிரபலமான நபராகத் திகழ்ந்து வந்தார்.

அதிலும் குறிப்பாக 'நோ பிரா' (உள்ளாடை இல்லை) புரட்சியின் காரணமாக இவரை இன்ஸ்டாகிரா மில் சுமார் 50 லட்சம் பேர் பின் தொடர்ந்தனர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் முறையாக சுல்லி, மேலாடையின் றிப் புகைப்படம் எடுத்து இன்ஸ் டாகிராமில் பதிவிட்டார். இதன் மூலம் அவர் சமூக ஊடகத்தில் மிகக்கடுமை யான விமர்சனத்துக்கும், கண்டனங் களுக்கும் உள்ளானார். ஆனாலும் அதனைப் பொருட்படுத்தாத அவர், பலமுறை இன்ஸ்டாகிராம் நேர லையில் மேலாடையின்றித் தோன்றி அதிரவைத்து வந்தார். இதனால் அவர் பழமைவாதிகளின் எதிர்ப் பைச் சம்பாதித்து வந்தார்.

இந்த நிலையில், தலைநகர் சியோலில் உள்ள தனது வீட்டில் நேற்றுமுன்தினம் சுல்லி பிணமா கக் கிடந்தார். அவரது மேலாளர் அளித்த தகவலின் பேரில் பொலி ஸார் விரைந்து சென்று, அவரது உடலை மீட்டுப் பிரேத பரிசோத னைக்கு அனுப்பி வைத்தனர். அவரது மர்ம சாவு குறித்து விசாரித்து வரும் பொலிஸார், அவர் தற்கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுவாக இருப்பதாகத் தெரிவித் துள்ளனர்.

சுல்லியின் நெருங்கிய தோழி யும், சக 'பொப்' பாடகியுமான ஜாங் கியூன் கடந்த 2017 ஆம் ஆண்டு தற்கொலை செய்துகொண்டமை நினைவுகூரத்தக்கது.

# உலைகலன்கள் வெடித்ததில் தெற்கு சீனாவில் 4பேர் சாவு



தெற்கு சீனாவின் குவாங்சி ஜுவாங் பிராந்தியத்தில் உள்ள லுச்சுவான் நகரில் தொழிற்சாலை ஒன்றில் உலைகலன்கள் வெடித் ததில் 4 பேர் உயிரி ழந்தனர்.

குவாங்சி லங்கே நியூ மெட்டீரியல்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற நிறுவனத்தில் உலைகலன்கள் பயங் கர சத்தத்துடன் வெடித் தன.

இதில் 4 ஊழியர் கள் உயிரிழந்தமை யுடன் 6 பேர் படுகாயமடைந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது

# நண்பர்கள் போலவே வலம் வரும் நாய்க் குட்டியும் கீரிப்பிள்ளையும்!



ரஷ்யாவில் உள்ள விலங்குகள் சரணா லயம் ஒன்றில், ஒரே கூண்டுக்குள் அடைக் கப்பட்டு நண்பர்களாக வலம்வரும் நாய்க்குட்டியும், கீரிப்பிள்ளையும் பார் வையாளர்களை வெகுவாகக் கவர்ந் துள்ளன.

இர்கட் பகுதியில் இயங்கிவரும் சிறிய அளவிலான இந்த சரணாலயத்திற்கு மோஸ்கா என்ற கீரிப்பிள்ளை ஒன்று மற் றொரு சரணாலயத்தில் இருந்து கொண்டு வரப்பட்டது. தாயிடமிருந்து பிரித்துக் கொண்டுவரப்பட்ட கீரிப்பிள்ளையை மகிழ்விக்கும் விதமாக ப்ரோஸ்கா என்ற நாய்க்குட்டியை அதனுடன் ஊழியர்கள் பழகவிட்டனர். அதிலிருந்து இரண்டும் நண்பர்களாக சகஜமாக உலாவருகின் றன. ஒரே பொம்மையை வைத்து இரு குட்டிகள் விளையாடுவதும், ஒரே உணவை இரு குட்டிகள் உண்டு மகிழ்வதும் தொடர் கிறது.

பாட்டிலில் புகட்டப்படும் உணவுகளை மட்டுமே உட்கொண்டு வந்த கீரிப்பிள்ளை, நாய்க்குட்டியைப் பார்த்துப் பழகி, தற்போது திட உணவுகளையும் உண்டு வருகிறது. அங்குவரும் பார்வையாளர்கள், நட்போடு பழகிவரும் மூன்று மாத வயது டைய இரு குட்டிகளையும் ஆச்சரியத்து டன் பார்த்துச் செல்கின்றனர்.






# தமிழ் தலைவர்களின் ஒன்றிணைவை சரியான பாதையில் முன்னகர்த்துங்கள்

நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் பலத்தை ஒருங்கிணைக்கும் வகையில் தமிழ் கட்சிகளை இணைக்கும் முயற்சி முதலாவது கட்ட வெற்றியை எட்டியிருக்கிறது.

காலத்தின் தேவையுணர்ந்து, தங்களின் சமூக கடமையை புரிந்து, இந்த முயற்சியில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் – கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களின் செயற்பாடு பாராட்டப்பட வேண்டியது.

ஐந்து கட்சிகளின் கையொப்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் ஆவணம், பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கையளிக்கப்பட்டு அது தொடர்பான அவர்களின் நிலைப்பாடு அறியப்படவுள்ளது. அதன் அடிப்படையிலேயே குறித்த ஐந்து கட்சிகளும் தமது ஆதரவு யாருக்கு என்பதை தீர்மானிக்கவுள்ளன.

கையெழுத்திடப்பட்டுள்ள ஆவணத்தில் தமிழர்களின் அடிப்படை அபிலாசைகளான இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு முக்கியமானதாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் காணி விடுவிப்பு – அரசியல் கைதிகளின் விடுதலை – காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் – பௌத்த ஊடுவல் – தொல்பொருள் திணைக்களத்தின் எதேச்சாதிகார செயற்பாடு – அரச நியமனங்களில் காணப்படும் குளறுபடிகள் எனப் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகிறது.

இந்நிலையில் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை பொறுத்தவரையில் தமிழர் தரப்புடன் எந்தவிதமான எழுத்து மூலமான ஒப்பந்தங்களுக்கும் தயார் இல்லை என்பதை வெளிப்படையாகவே தெரிவித்து விட்டனர்.

அவர்கள் விரும்பினாலும் கூட ஒப்பந்தம் ஒன்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதுநிலைகள் தென்னிலங்கையில் இல்லை. அதற்காக, தமிழ் மக்களின் கோரிக் கைகளை பிரதான வேட்பாளர்களினால் புறந்தள்ளி விடவும் முடியாது. அது தமக்கான வெற்றியை அவர்களாகவே புறந்தள்ளி விடுகின்ற காரியமாகவே இருக்கும்.




இந்த தர்ம சங்கடமான நிலையைப் பிரதான வேட்பாளர்களும் அவர்களை சார்ந்தவர்களும் நன்கே உணர்ந்திருக்கிறார்கள். இந்த சூழலில்தான் தமிழ்மக்கள் சார்ந்த பிரதான தரப்புக்கள் இணைந்துள்ளன.

இந்த இணைவு, எந்த ஒப்பந்தங்களையும் செய்து கொள்ள மாட்டேன், ஆனாலும் தமிழ் மக்கள் எனக்கே வாக்களிப்பார்கள் என்று எகத்தாளமிட்ட தரப்புக்களையும் நிச்சயம் கொஞ்சம் யோசிக்க வைக்கும். எனவே, இந்த சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு தொடர்ந்தும் புத்திசாதுரியமாகக் கையாள வேண்டும்.

தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை, எழுத்து மூல ஒப்பந்தத்துக்கு தயாராக இல்லை என்று இன்றைய சூழலில் சாத்தியமற்ற சாராம்சத்திற்காக யாரும் தாழியை உடைத்து நாசம் பண்ணி விடக்கூடாது.

ஒப்பீட்டளவில் அதிகபட்ச கோரிக்கையை சாதகமாக பரசீலிக்கும் தரப்பு எது? – எந்தத் தரப்பு கணிசமான – அதேவேளை காத்திரமான கோரிக்கைகளை தமது விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க உடன்படுகின்றன போன்றவற்றை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, அதிகபட்ச கோரிக்கையை ஏற்றுக் கொள்பவர்களுடன் அவற்றிற்கான கால எல்லைகளை வரையறுத்துக் கொள்ள முடியும். குறிப்பாக, முடியுமானவற்றை அடுத்த ஆறு மாதங்களுக்குள் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக செயற்படுத்த வலியுறுத்த வேண்டும்.

குறித்த செயற்றிறனின் அடிப்படையிலேயே எதிர் காலத்தில் நாடாளுமன்ற செயற்பாடுகள் அமையும் என்பதை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

மறுபுறத்தில் சிவாஜிலிங்கம் களம் இறங்கியிருக்கிறார். யார் சொல் பேச்சுக் கேட்டு இறங்கினாரோ தெரியவில்லை. இருப்பினும் ஏற்கனவே ஒரு தடவை ஒன்பதாயிரத்துக் கும் அதிகமான வாக்குகளைப் பெற்றவர் அவர்.

பிரதான வேட்பாளர்கள் தமிழர் தரப்பின் கோரிக்கைகளை சாதகமாக பரசீலித்தால் தேர்தலில் இருந்து விலகுவது தொடர்பாக பரிசீலிக்கலாம் என்று ஏற்கனவே தெரிவித்து விட்டார்.

அதேவேளை, ஜே.வி.பி.யும் தனித்து நிற்பதால் சில ஆயிரம் வாக்குகள்கூட முடிவை மாற்றிவிடும் என்ற நிலையில்கள நிலைவரம் காணப்படுகின்றது.

எனவே, நீங்கள் எமது மக்களை மகிழ்ச்சிப்படுத்தினால், சிவாஜியை களத்தில் இருந்து அப்பறப்படுத்து வோம் என்ற செய்தியை பக்க பலமாக தென்னிலங்கைத் தரப்புகளுக்கு தெரிவிக்கலாம்.

இவ்வாறு முடிந்தவரை தமிழ் மக்கள் பயனடையும் வகையிலும் அடிப்படை அபிலாசை களை முன்னகர்த்தும் வகையிலும், இந்தச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட வேண்டும். தமிழர் தரப்பின் இன்றைய இணைவு முன்நகர வேண்டும்.

இந்த ஒருங்கிணைவை இடையிலே துண்டிக்காமலும் சூழ்ச்சிகளை சூழவிடாமலும் முன்னகர்த்த வேண்டிய பாரிய பொறுப்பை மாணவர்கள் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

நன்றி :- ‘ஆதவன்’

# தமிழர் கட்சிகளின் பஞ்ச ஒப்பம்!

நண்பர்களும் எதிரிகளும் இடம்மாறிக்கொள்ளும் போது ஏற்படும் இரசாயன மாற்றங்களை சமகாலத்தில் உள்ளூரிலும் காணமுடிகிறது; உலக அரங்கிலும் காணமுடிகிறது.

வடகிழக்கு சிரியாவை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள குர்துகளின் முதுகில் அமெரிக்கா குத்தியவுடன் தமது இருப்புக்கு ஆபத்தாக எல்லைதாண்டி வரும் துருக்கியின் வியூகத்தை முறியடிக்க தமக்கு ஒவ்வாமை கொண்ட அஸாத்தின் இராணுவத்தோடு குர்துகள் சமரசத்தை எட்டினர்.

இவ்வாறாக குர்துகள் எடுத்த திடீர் சமரச நிலையை எதிர்பார்க்காத டொனால்ட்ட்ரம்போ தன்னால் முதுகில் குத்தப்பட்ட குர்துகளின் ஆற்றாமையையும் குர்துகளை கைவிட்டமை ஒரு துரோகம் என அமெரிக்க ராணுவ உயர்மட்டத்தில் கிளம்பிய எதிர்ப்பையும் சமாளிக்க துருக்கி மேற்கொள்ளும் ராணுவ நடவடிக்கைக்கு பதிலடி என்ற கோதாவில் சில நகர்வுகளில் இறங்கியுள்ளார்.

அதன் முதற்கட்டமாக துருக்கியின் இரண்டு அமைச்சகங்களுக்கும், துருக்கி அரச இயந்திரத்தின் மூத்த அதிகாரிகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக வொஷிங்டன் கூறுகிறது. அத்துடன் இந்த நிலைவரங்களைக் கையாளவென அமெரிக்க துணை அரசதலைவர் மைக் பென்ஸும் விரைவில் ஓடோடிச் செல்லவுள்ளார்.

இது உலக அரங்கில் நண்பர்களும் எதிரிகளும் இடம்மாறிக்கொள்ளும் போது ஏற்படும் இரசாயன மாற்றங்களுக்கு ஓர் உதாரணம். உலக அரங்கில் இவ்வாறு இடம்பெற, இலங்கைத்தீவின் அரசியல் அரங்கிலும் இவ்வாறான நகர்வுகளும் பீறிட்டுச்செல்லும் சில காட்சிகளும், தெரியத்தான் செய்தன.

இன்னும் சரியாக ஒரு மாதத்தில் நவம்பர் 16 இல் சிறிலங்காவின் முதன்மைத்தலையாரியைத் தெரிவு செய்யும் தேர்தல் இடம்பெறவுள்ளது.

ஆயினும் இந்த தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறான நகர்வை எடுப்பது? எந்தப்பிசாசுக்கு வாக்களிப்பது? என இருக்கக்கூடிய முக்கிய பேசுபொருளுக்குத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளால் இன்னமும் முறையான விடை வழங்கப்படவில்லை. இதற்குமாறாகத் தேர்தல் புறக்கணிப்பு என்ற குரல்கள் தேய்மானமாகப்போகின்றன. சிங்கள வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வரட்டும், அதன் பின்னர் பார்க்கலாம் என்ற குரல்கள் தான் தமிழர் பிரதிநிதிகளிடம் இருந்து ஒலிக்கச் செய்கின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் தான் இந்தத் தேர்தலில் தமிழ்மக்கள் சார்பில் ஒரு பொது நிலைப்பாடொன்றை வெளிப்படுத் துவதற்காகவும் தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே இணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியங்களினால் ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது.


இந்த முயற்சியின் ஓர் அத்தியாயம் நேற்று முடிந்தவேளை தமிழ் கட்சிகளின் ஆலோசனைக்கு அமைவாக தயாரிக்கப்பட்;ட பொது உடன்பாடு ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய ஐந்து கட்சிகளும் ஒப்ப மிட்டிருந்தன

ஆயினும் பலமான வாதப்பிரதி வாதங்களுடன் நகர்ந்த இந்த அத்தியாயத்தின் ஒரு ஒரு முக்கிய மையப்புள்ளியாக சிறிலங்காவின் இடைக்கால அரசமைப்பை எதிர்ப்பதா? இல்லையா என்ற விடயம் மாறியிருந்தது.

குறிப்பாக சிறிலங்காவின் இடைக்கால அரசமைப்பை எதிர்க்கும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வாசகங்கள் இந்தஉடன்படிக்கை ஆவணத்தில் இடம்பெற வேண்டும் என்பதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி விடாப்பிடியாக இருந்தது. ஆனால் ஏனைய கட்சிகளோ இதற்குத்தயாராக இல்லை.

இதனால் தங்களது நிலைப்பாட்டில் சமரசம் செய்த் தயாராக இல்லாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தக் கூட்டத்திலிருந்து துருத்திய படி வெளியேறியது. இறுதியில் இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் இந்த ஆவணத்தில் ஒப்பமிட்டனர்.

தற்போது இந்தக் கூட்டத்தில் நடந்தது என்ன என்ற பாணியிலான தன்னிலை விளக்கம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித் தரப்பில் இருந்தும் அதேபோல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான் ஒற்றுமையைக் குழப்புவதாக விமர்சனம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பில் இருந்தும் வருகின்றன.





ஆனால் இந்த ஐந்து கட்சிகளுக்கும் இடையில் ஒப்பமிடப்பட்ட இந்த ஆவணம் இந்தத்தேர்தலில் தமிழ்மக்கள் எந்த நகர்வை எடுப்பது அல்லது யாருக்கு வாக்களிப்பது என்ற வினாக்களுக்கு நேரடியாக விடைவழங்கும் ஓர் ஆவணமாகத் தெரியவில்லை

மாறாக சிறிலங்காவின் முதன்மைத் தலையாரிக்குரிய தேர்தல் களத்தில் நிற்கும் சிங்களத்தின் முன்னணி வேட்பாளக்குதிரைகளிடம் தமிழர்களின் சார்பாக தமிழ்கட்சிகள் முன்வைக்கபடவேண்டிய 12 அம்சங்களை கோரும் ஒரு ஆவணமாகவே காட்சி யளிக்கின்றது.

நன்றி - ‘ஐ.பி.ஸி தமிழ்’

# பாசையூர் வலை திருத்தும் மண்டபத்தின் புதிய கட்டடத்தைத் திறந்தார் முதல்வர்





யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் தேசிய ஒற்றுமைப்பாடுகள் மற்றும் நல்லிணக்க அமைச்சின் ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பாசையூர் வலை திருத்தும் மண்டபத்தின் புதிய கட்டடம் யாழ்மாநகர முதல்வர் ஆனல்டினை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், கடற்றொழில் சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள், அப்பகுதி பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# 'யாழ்ப்பாணத்துக்கு ஒரு நதி' திட்டத்துக்கு ரூபா 360 கோடி

## அனுமதி அளித்தது அமைச்சரவை

கொழும்பு, ஒக். 17

யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் மற்றும் நீர்பாசனம் ஆகியவற்றின் பிரச்சினையைத் தீர்க்க 3.6 பில்லியன் ரூபா நிதியை செலவிட அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாணத்துக்கு ஒரு நதி' என்ற பெயருடைய இந்தத் திட்டத்தில் வடமராட்சி நீர்ப்பரப்பில் உள்ள கிணறுகளில் நீரில் உப்புத் தன்மையைக் குறைத்தல், நீர்ப்பாசனத்தை 800 கோடி கன மீற்றராக மேம்படுத்தல் என்பவை முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம்மக்களின்நீர்த்தேவையை நிறைவு செய்வதற்குரிய நீர்ப்பாசனம் இல்லை என்று சுட்டிக்காட்டி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன் வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமையவே அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக ஆயிரத்து 300 ஹெக்ரேயர் நிலபரப்பு பயன் பெறுவதுடன் 3 லட்சம் மக்களும் நன்மையடைவார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்ட இளைஞர் கைது!

## கைக்குண்டும் மீட்டதாக பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் மாநகர் உள்ளிட்ட பகுதிகளில்நீண்டகாலமாக வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்டுவந்த இளைஞன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது உடைமையிலிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம்இராசாவின்தோட்டம் பகுதியைச்சேர்ந்த ஜமேசன் அஜந்தன் (வயது 21) என்ற இளைஞனே நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டில் பல முறைப்பாடுகளின் கீழ் இளைஞனைப் பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்று முன் தினம் அவர் யாழ்ப்பாணம் சிறப்பு பொலிஸ் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரில் குடும்பப் பெண்ணொருவரின் கைப்பையைப் பறித்துச் சென்று அதிலிருந்த 24 தங்கப் பவுண் நகையைக் கொள்ளை அடித்தமை தொடர்பில் சந்தேகநபர் தேடப்பட்டுவந்தார்என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் கைக்குண்டு ஒன்று மீட்டதாகத் தெரிவிக்கும் பொலிஸார், சந்தேகநபரை ஆபத்தான ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழும் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்தவுள்ளார் எனவும் குறிப்பிட்டனர்

கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால் அவரை மேல் நீதிமன்றினாலேயே பிணையில் விடுவிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி ஹெரோயின் போதை பொருளைத் தமது உடைமையில் வைத்திருந்தார் எனும் குற்றசாட்டில் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பொலிஸ் நிலைய சிறைக்கூட இரும்புப் படலையின் பூட்டைச் சரியாக பொலிஸார்பூட்டாமையால், அதனைத் திறந்து சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்று தலைமறைவானார்.

சம்பவத்தை அடுத்து ரிசேர்வ் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

தப்பி சென்ற நபரை கடந்த இரு வார காலத்துக்கு மேலாகப் பொலிஸார் தேடி வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரைக் கைது செய்த யாழ்ப்பாணம் சிறப்பு பொலிஸ் பிரிவினர், பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (ஐ - 07)

## தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பொலித்தீன் பயன்பாட்டுக்கு தடை

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது பொலித்தீன் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான ருவண் குணசேகர இதனைத் தெரிவித்தார்.

பிரசார நடவடிக்கையின்போது பொலித்தீன் பயன்பாடு இடம்பெற்றிருந்தால், ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான சட்டத்துக்கு அமையவும், தேசிய சுற்றுச்சூழல் சட்டத்துக்கு அமையவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாதாகைகள், சுவரொட்டிகள், கையேடுகள், கொடிகள் என்பனவற்றை தேர்தல் சட்டத்திற்கு அமைய, 3 சந்தர்ப்பங்களில் மாத்திரமே பயன்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

வேட்பாளரின் வாகனத்திலும், சட்ட ரீதியாக அனுமதி வழங்கப்பட்ட காரியாலயங்கள் மற்றும் பொதுக்கூட்டம் இடம்பெறும் இடங்களில் மாத்திரமே அவற்றைப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையராக சமன் ரத்நாயக்க



கொழும்பு, ஒக். 17

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக, சமன் சிறி ரத்நாயக்கவை நியமிப்பதற்கு, அரசமைப்புச் சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

நேற்று முன் தினம் நடந்த அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் இந்த நியமனத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் செயலகம் தெரிவித்துள்ளது.

சமன் சிறி ரத்நாயக்க மேலதிக தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 78,403 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக முன்வைக்கப்பட்ட 78,403 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7இலட்சத்து 17ஆயிரத்து 918 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இந்தத் தேர்தலில் 6 இலட்சத்து 39 ஆயிரத்து 515 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ஐ)




# யாழ்.இந்துக் கல்லூரி அதிபராக செந்தில்மாறன் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்புதிய அதிபராகரட்ணம்செந்தில் மாறன் தனது கடமைகளை நேற்று முற்பகல் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் அலுவலகத்தில் பாடசாலைச் சமூகத்தின் வரவேற்பையடுத்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இதுவரை காலமும் பதில் கடமையாற்றி வந்த சதாசிவம் நிமலன்,மாணவர் அனுமதிக்காக கையூட்டுப் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமையையடுத்து, கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் ஆர். செந்தில்மாறன் பதில் அதிபராக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனான ஆர். செந்தில்மாறன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணி பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், பட்டப் பின் தகைமையையும் கொண்டவர்.

இலங்கை சட்டக் கல்லூரியில் பயின்று,தகுதிபெற்றதுடன்இலங்கை கல்விநிர்வாக சேவையிலும் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்தவர். (ஐ - 07)

காலைக்கதிர் Kalaikathir


# ரி - 20 உலகக்கிண்ண தொடரில் சம்பியன் அணிக்கான பரிசுத் தொகை அறிவிப்பு!




கிரிக்கெட் போட்டிகளில் இரசிகர்கள் அதிகம் விரும்பி பார்க்கும் ரி - 20 கிரிக்கெட்டின் திருவிழா என வர்ணிக்கப்படும் ரி -20 உலகக்கிண்ண தொடர், அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

ஒக்ரோபர் 8ஆம் திகதி ஆரம்பமாகும் இத்தொடர், எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதற்கிடையில், இத்தொடருக்கான தயார்படுத்தல்களை கிரிக்கெட் ஆஸ்திரேலியா தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் ரி - 20 உலகக்கிண்ண தொடரில், ஆண்கள் மற்றும் பெண்கள் அணிக்கு இடையிலான பரிசுத் தொகையில் சமநிலையை உறுதி செய்வதாக கிரிக்கெட் ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதில் ஆண்கள் கிரிக்கெட்டில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு ஒரு கோடி 60 லட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்குவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை பெண்கள் கிரிக்கெட்டில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு பரிசுத் தொகையை 320 சதவீதம் அதிகரிப்பதாக கிரிக்கெட் ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதன்மூலம் வெற்றியாளர்கள் 10 லட்சம் அமெரிக்க டொலர்களை வீட்டிற்கு எடுத்துச் செல்வதை, கிரிக்கெட் ஆஸ்திரேலியா உறுதிச் செய்துள்ளது.

ஐ.சி.சி.யின் அறிவிப்பைத் தொடர்ந்து, ஆஸ்திரேலியா மகளிர் அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினால், அந்த தொகையை 600000 அமெரிக்க டொலர்களாக உயர்த்தவும் கிரிக்கெட் ஆஸ்திரேலியா உறுதியளித்துள்ளது.

# பாகிஸ்தான் வருத்தம்!

பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணியின் வீரர்கள், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக விடுதியிலேயே முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக, இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ம்மி சில்வா கூறிய கருத்து ஏமாற்றம் அளிப்பதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.



இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை கிரிக்கெட் குழுவின் வற்புறுத்தலின் பேரில் இலங்கை அணிக்கு ஜனாதிபதி அளவுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்த நிலையில் காயப்படுத்தும் அளவிற்கான இலங்கை கிரிக்கெட் தலைவரின் கருத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு மிகவும் ஏமாற்றம் அளிக்கும் விதமாக உள்ளது.

முடிந்த அளவுக்கு அவர்கள் வசதியாக தங்க வேண்டும் என்று விரும்பினோம் என்று தெரிவித்துள்ளது.

பல்வேறு சர்ச்சைகளுக்கு பின்னர் 10 வருடங்களுக்கு பிறகு பாகிஸ்தானுக்குச் சென்ற இலங்கை அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடியது.

இதில் ஒருநாள் தொடரை 0 - 2 என இழந்த இலங்கை அணி, ரி-20 தொடரை 3-0 என முழுமையாக கைப்பற்றி வரலாற்று சாதனைப் படைத்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் சென்ற இலங்கை அணிக்கு வரலாறு காணாத பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஆனால் எவ்வித அசம்பாவிதமும் இதன் போது நிகழவில்லை.

# ஓய்வுபெற்ற முன்னணி வீரர்களின் இடத்தை ஒரே நாள் இரவில் நிரப்பிவிட முடியாது!

இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில், தென்னாபிரிக்க அணி தடுமாற்றத்தை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், ஓய்வுப் பெற்ற முன்னணி வீரர்களின் இடத்தை ஒரே நாள் இரவில் நிரப்பி விட முடியாது என அணியின் தலைவர் டு பிளெஸிஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் தோல்வியின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து



தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

இந்திய துணை கண்டத்தில் விளையாடும் போது, முதல் இன்னிங்ஸில் பெரிய ஓட்டங்களை குவிக்க வேண்டியது முக்கியம் என்பதை அறிவோம். அப்போதுதான் வெற்றி வாய்ப்பைப் பெற முடியும்.

இந்தத் தொடரை வெல்வதற்கு இந்தியா தகுதியான அணி. உலகின் சிறந்த அணி என்றால், நிறைய அனுபவம் இருக்கவேண்டும். இப்போது நாங்கள் கிட்டத்தட்ட எல்லா அனுபவத்தையும் இழந்து விட்டோம். அனுபவம் வாய்ந்த ஸ்டெயின், மோர்னி மோர்கல், அஷிம் அம்லா, டி வில்லியர்ஸ் ஆகியோர் ஓய்வு பெற்று விட்டனர்.

அவர்களது இடத்தை ஒரே நாள் இரவில் நிரப்பி விட முடியாது. இப்போது அணியில் உள்ள பெரும்பாலான வீரர்கள் குறைந்த எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளில்தான் விளையாடி உள்ளனர்.

அவர்கள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள காலம் பிடிக்கும். அணியில் உள்ள சிறந்த வீரர்கள் வெளியேறும்போது, எந்த அணியும் இது போன்ற தடுமாற்றத்தை சந்தித்துதான் ஆக வேண்டும் என கூறினார்.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரை, 0 - 2 எனத் தென்னாபிரிக்கா அணி, இந்தியா அணியிடம் இழந்துள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முதல் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடராக, இத்தொடரே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 19ஆம் திகதி ராஞ்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)



# தமிழ் சினிமாவில் கால் பதிக்கும் இந்திய கிரிக்கெட் வீரர்கள்!

இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர்களான ஹார்பஜன் சிங் மற்றும் இர்பான் பதான் இரண்டு தமிழ் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். கடாரம் கொண்டான் படத்திற்கு பிறகு, இமைக்கா நொடிகள் படத்தின் மூலம் பிரபலமான அஜய் ஞானமுத்து இயக்கத்தில் விக்ரம் நடிக்க உள்ளார்.

7 ஸ்கிரீன் ஸ்டுடியோ நிறுவனமும், வயாகாம் 18 ஸ்டூடியோஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கும் இந்த படத்திற்கு இசைப்புயல் ஏ.ஆர் ரஹ்மான் இசையமைக்க இருப்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இதன் படப்பிடிப்பு வரும் ஒர்ரோபர் 4ஆம் திகதி ஆரம்பிக்க உள்ள நிலையில், இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான இர்பான் பதான், படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் அவர் நடிகராகவும் அறிமுகமாகிறார்.

இதேபோல டுவிட்டரின் வாயிலாக அடிக்கடி தமிழ் ரசிகர்களிடம் கலந்துரையாடி வரும் இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஹார்பஜன் சிங், நடிகர் சந்தானம் நடிக்கும் டிக்கிலோனா படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# பொது உடன்பாடு ஆவணம் தயாரிப்பில் நடந்தது என்ன?

## யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் விளக்கம்

கொழும்பு, ஒக். 17

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் பேரம் பேசுவதற்கு தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து தயாரித்த பொது உடன்பாட்டு ஆவணம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைத்தீவில் கடந்த ஏழு தசாப்தங்களாக தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அடக்குமுறைகளுக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகிவந்த நிலையிலேயே இன்று ஒட்டு மொத்தமாக எமது பூர்வீக ரீதியான தாயகத்தின் இனப்பரம்பல் முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கில் தொடங்கிய பௌத்த சிங்கள மயமாக்கல் இன்று வடக்கிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நாம் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாதவர்களாக கையறு நிலையிலேயே இருக்கின்றோம்.

ஈழத் தமிழர்களாகிய நாம் எமக்குள் பல்வேறு கட்சிகளாகப் பிளவுபட்டு எமது பேரம் பேசும் பலத்தை இழந்துவிட்ட நிலையை இலங்கையில் காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வரும் தலைவர்கள் தமக்கு சாதகமாகக் கையாண்டு வடக்கு - கிழக்கில் சிங்கள குடியேற்றங்களையும் பௌத்த மயமாக்கல்களையும் அரங்கேற்றி வருகின்றனர்.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய விடயங்களான அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், இராணுவ வெளியேற்றம், மீள்குடியமர்வு, காணி விடுவிப்பு, காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்தல், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், காணாமற்போனவர்களின் விவகாரத்துக்கு தீர்வு காணுதல் முதலான விடயங்களுக்குக் கூட எம்மால் தீர்வு காண முடியாத துர்ப்பாக்கிய நிலையியை எமது அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொண்டிருந்தால் இத்தகைய பொது உடன்பாட்டு முயற்சி ஒன்றை நாம் மேற்கொண்டு பேரம் பேசும் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்கின்ற தேவையும் எண்ணமும் எமக்கு ஏற்பட்டிருக்காது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் கட்சிகள் அனைத்தும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒருமித்த முடிவொன்றை எடுப்பதன் மூலமாக நாம் இழந்த பேரம் பேசும் பலத்தை மீளப் பெற்றுக்கொள்வதன் மூலமாகவே நாம் எமது அரசியல் வேணாவாக்களை வென்றெடுக்கச் சாத்தியமான வழிகளில் முன்னகர முடியும்.

இன்றைய சூழலில் பேச்சுக்கான கதவுகள் திறக்கப்படவேண்டுமாயின் எமது பேரம் பேசும் பலத்தை மீண்டும் பெற்றுக்காள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய கட்சிகள் ஒருமித்து முடிவெடுக்கவேண்டியது காலத்தின் கட்டாய தேவை என்பதை உணர்ந்து கொண்டதனாலேயே நாம் இத்தகைய முயற்சியில் கட்சிகளைக் கலந்துரையாடுவதற்கு அழைத்திருந்தோம்.

இந்த அடிப்படையில் தொடங்கப்பட்ட கலந்துரையாடலின் ஆரம்பத்திலேயே ஓர் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதாவது அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்றைத் தயாரித்து அதனை முன்வைத்து பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவது என்பது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதன் பேரிலேயே தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன் கலந்துரையாடல்களில் பங்குகொண்ட கட்சிகளினால் முன்மொழியப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையிலேயே இந்த ஆவணத் தயாரிப்பு இடம்பெற்றது.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் செம்மையான வகையில் தயாரிக்கப்படுவதில் தமது முழுமையான ஒத்துழைப்பைப் பங்குபற்றிய அனைத்துக் கட்சிகளும் மனப்பூர்வமாக இணைந்து மேற்கொண்டிருந்தன. இப்பொது உடன்பாட்டு ஆவணத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ ஆகிய அனைத்து கட்சிகளும் முழுமையாக ஏற்றுக்கொண்ட போதும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய யாப்புருவாக்கத்தின் இடைக்கால அறிக்கை ஒற்றையாட்சியை முன்னிலைப்படுத்துவதாக அமைவதால் அதனை நிராகரிக்கவேண்டும் என்பதையும், அந்த ஆவணத்தில் உள்வாங்கவேண்டும் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் பிரேரித்த வேளையில் அவ்விடயம் தொடர்பாகக் கட்சிகள் அனைத்தினாலும் ஒன்றுக்கு ஒன்று முரணான வாதங்கள் முன்வைக்கப்பட்டு நீண்ட நேர வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றும் ஓர் முடிவு எட்டப்படாத நிலையிலேயே நான்காவது கலந்துரையாடல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல் மறுநாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அனைத்துக் கட்சிகளையும் இணங்க வைத்து பொது உடன்பாட்டை கைச்சாத்திடும் நோக்குடன் 14.10.2019 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடலின்போது இடைக்கால அறிக்கையை நிராகரிக்கவேண்டும் என்பதை ஆவணத்தில் உள்ளடக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் உறுதியாக இருந்தனர். ஆனால் தமிழரசுக்கட்சி, புளொட் என்பன அதனை ஆவணத்தில் உள்ளடக்கக்கூடாது என்றும் இலங்கை அரசுக்கு சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழியின் பேரிலேயே அரசமைப்பு உருவாக்க முயற்சி இடம்பெறுகின்றது. அதனை நாம் குழப்பி விடக்கூடாது என்றும் கூறினர்.

அதேவேளை, ரெலோ தரப்பினர் கருத்து தெரிவிக்கும்போது, தாம் அவ் இடைக்கால வரைவு வந்த போதே அதனை எதிர்த்தவர்கள் என்றும் இன்றைய நிலையில் அதனை ஆவணத்தில் உள்வாங்கி தமிழரசுக்கட்சியினருக்குச் சங்கடத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்றும் தாம் ஒன்றாகப் பயணிப்பவர்கள் என்பதால் இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து இந்த ஆவணத்தில் இடைக்கால அறிக்கை நிராகரிப்பதை உள்ளடக்க தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் தாம் இடைக்கால அறிக்கையை வெளிப்படையாக நிராகரித்துள்ளபோதும், புதிய அரசமைப்பு உருவாக்கம் கைவிடப்பட்டுள்ளநிலையிலும் இவ் ஆவணத்தில் ஒற்றையாட்சி நிராகரிப்பு என்ற வாசகம் இருப்பதன் அடிப்படையிலும் இடைக்கால அறிக்கை பற்றி இந்த ஆவணத்தில் உள்ளடக்கவேண்டிய தேவை இல்லை எனவும் வாதிட்டனர்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இவ்வாதங்களுடன் உடன்பட மறுத்து அதற்கான நியாயப்பாடுகளைனையும் வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர வாய்ப்புள்ளமையை ஜனாதிபதி வேட்பாளர்களின் கருத்துக்களை குறிப்பிட்டு முன்வைத்தார்கள். அதனால் ஒற்றையாட்சி இடைக்கால வரைவை நிராகரிக்கவேண்டும் என்னும் தமது நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் பின்வாங்கவில்லை.

இந்நிலையில் விவாதம் நீண்டு கொண்டு செல்வதாலும் இதனை ஓர் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் எனும் நோக்கிலும் அடிக்குறிப்பிலேனும் இடைக்கால அறிக்கை நிராகரிக்கப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரேரித்தது என்று குறிப்பிடலாம் எனச் சிவில் சமூகத் தரப்பினரால் ஓர் கருத்து முன்வைக்கப்பட்டது.

அதனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக் கொண்டபோதும் ஏனைய கட்சிகள், அடிக்குறிப்பு இடுவது எம்முள் இணக்கப்பாடு இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டும் என்பதுடன் பொது ஆவணம் பலவீனமடையும் எனக் கூறி அதனை அடியோடு மறுத்துவிட்டனர்.

புதிதாக உருவாக்கப்படும் அரசமைப்பு ஒற்றையாட்சி முறையை நிராகரித்து, தமிழர் தேசத்தினை அங்கீகரித்து, அதற்குத் தனித்துவமான இறைமை உண்டு என்பதனையும், தமிழ் மக்கள் சர்வதேசச் சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதனையும் அங்கீகரித்து, சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இலங்கையின் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என ஏற்கனவே நாம் எமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள நிலையிலும் இடைக்கால அறிக்கையை நிராகரித்தல் என்பது இந்த ஆவணத்தில் தேவையற்றதென ஏனைய 5 கட்சிகளும் வாதிட்டன.

இந்நிலையில் இறுதியாக இடைக்கால அறிக்கை நிராகரித்தல் வேண்டும் என்ற விடயத்தை ஆவணத்தில் உள்ளடக்காது விடுவது என்பதுடன் இது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட கட்சிகள் வெளிப்படுத்திய கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் நாம் ஊடக அறிக்கை ஒன்றின் மூலமாகப் பகிரங்கப்படுத்துவதென்றும் அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டு கையொப்பமிடவேண்டும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தரப்பால் வலியுறுத்தப்பட்டபோதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியினர் கையொப்பமிட மறுத்தனர்.

தொடந்தும் சிவில் சமூகத்தினர் சார்பில் பங்கு கொண்ட மதகுருமார்கள் மேற்கொண்ட சமரச முயற்சிகள் வெற்றி அளிக்காத நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இதன்போது உடன்பாட்டில் கையொப்பமிட மறுத்ததுடன் தமது கவலையையும் பதிவு செய்து வெளியேறிச் சென்றனர்.

இந்நிலையில் கையொப்பமிட்ட ஐந்து கட்சியினருடனும் தொடர்ந்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு ஐந்து கட்சித் தலைவர்களும் அடங்கிய குழுவினர் இந்த ஆவணத்தை முன்வைத்து மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதென்றும் அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நகர்வுகளைத் தீர்மானிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று இந்த முயற்சியில் இறங்கிய நாம், ஐந்து கட்சிகள் உடன்பட்டு வந்த நிலையில் அவர்களிடம் இந்தப் பொது ஆவணத்தை ஒப்படைத்து இதனடிப்படையில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறு தெரிவித்ததோடு அவர்கள் அரசியல் தலைவர்கள் என்ற வகையிலும் நாம் பொறுப்பு வாய்ந்த மாணவர்களாய் ஒன்றிணைக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டவர்கள் என்ற வகையிலும் இவ் விடயத்தை அவர்களிடமே ஒப்படைத்து விலகிக் கொண்ட நிலையில் கலந்துரையாடல்களின் முன்னேற்றங்களின் அடிப்படையில் அரசியல் கட்சித் தலைவர்களே தொடர்ச்சியாக இவ் விடயத்தைக் கையாள்வார்கள்.

தேர்தல் தொடர்பான ஒருமித்த நிலைப்பாடு ஒன்றை எடுக்கும் எமது முயற்சி மக்கள் முன் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் இந்த நிலைப்பாட்டில் இருந்து மாறுவார்கள் எனில் மக்கள் இவ்விடயத்தில் சரியான முடிவை எடுக்கும் வகையில் அந்த நகர்வுகளைத் தொடர்ந்தும் அவதானித்த வண்ணம் இருத்தல் வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

This is with reference to the advertisement dated 22.08.2019 calling applications for the Vacancies for the Academic / Academic support Posts at the Faculty of Arts and Faculty of Hindu Studies. It is hereby notified that the closing date for entertaining applications for all posts has been extended upto 30.10.2019.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA,
15.10.2019

# பொறுப்பற்ற கருத்துப் பகிர்தல்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது

## கபிர் ஹாசிம் மீது நஸிர் அஹமட் காட்டம்

பங்காளிக் கட்சிகளுக்கு ஐ.தே.க. கட்டுப்படாது எனவும் ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் போது நிபந்தனைகளுக்கு ஒரு போதும் கட்டுப்பாடாது எனவும் அக்கட்சியின் தவிசாளர் கபிர் ஹாசிம் தெரிவித்திருப்பது பொறுப்பற்ற – ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும்.

– இப்படித் தெரிவிக்கின்றார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது:–

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக்கவேண்டும் என்பதை உள் மனதில் வைத்திருந்த கபிர் ஹாசிம் தனது எண்ணத்தை தமது தலைவர் ரணிலிடம் சொல்லமுடியாத – முதுகொலும்பற்ற நிலையில் மு. காவின் தலைவரின் தயவை நாடிஅவர் மூலமாக சொல்ல வைத்ததை நினைவில் கொள்ள வேண்டும். எனினும் ஐக்கிய தேசிய முன்னணியினர் என்ற ரீதியில் அதில் அங்கம் வகித்து வந்த அனைத்து கட்சிகளும் நிபந்தனைகள் அற்றவகையிலேயே தமது முழுமையானஆதரவை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கியிருக்கின்றன. இதற்கான பிரதான காரணம் முதலில் பொது எதிரி தோற்றக்கடிக்கப்படவேண்டும் என்பதாகும்.

இந்தஆதரவைவழங்குவதன் ஊடாக வெற்றி பெறும் தமது வேட்பாளர் மூலமாகத் தமது சமூகங்களுக்குரிய அபிலாஷைகளைப் பெற்றெடுக்கவேண்டும் என்பதே சிறுபான்மைக் கட்சிகளின் எதிர்பார்ப்பாகும். இதற்காகவே அவர்கள் தற்போது களத்தில் குதித்து செயற்பட்டு வருகின்றனர். எனவே பொறுப்பற்ற, அர்த்தமற்ற கருத்துகளை முன்வைப்பதை முக்கிய பொறுப்பில் இருக்கும் கபிர் ஹாசிம் முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும் இவரது இத்தகைய கருத்துகள் காரணமாக ஒவ்வொரு கட்சிகளினது போராளிகளும் மனம் புண்பட்டுப் போயுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனைவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடன்பாடு செய்து கொண்டு தற்போது ஆதரவு வழங்க முன் வந்திருக்கிறது. இதற்கான



பிரதான காரணம் ஒரு தரப்பு மீது மறுதரப்புக்கு விசுவாசமற்ற நிலை இருப்பதாகும்.

ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்த வரையில் அவ்வாறான விசுவாசமற்ற நிலையிருக்கவில்லை. இந்த முன்னணியிலுள்ள அனைத்துத் தரப்பினரும் தமது வேட்பாளர் வெற்றி பெறவேண்டும், இதன் மூலமாக இந்த நாடு சுபீட்சம் அடையவேண்டும் என்ற உயரிய நோக்கினை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

வெற்றி இலக்கை தொட்ட பின்னரே பல்வேறு சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்காளிக் கட்சியினர் தமக்குரிய உரிமைகளைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே அவர்களது நம்பிக்கை. அப்போது அதற்காக நிபந்தனைகளையும் கால அவகாசங்களையும் அவர்கள் முன்வைப்பதும் தவறாகிவிடாது.

எனவே, இப்போது வழங்கப்படும் ஆதரவானது பொது எதிரிக்கு தோல்வியை ஏற்படுத்தவேண்டும் என்பதற்கானது என்ற விடயத்தைக் கருத்தில் கொள்வது நல்லது. பொறுப்பு மிகு பதவியில்இருக்கும் கபிர் ஹாசிம் போன்றோர் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் கருத்துப் பகிர்வதைத் தவிர்த்தால் நல்லது – என்றார்.(ஐ)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவைக்குப் புதிய உறுப்பினர்

*யாழ்ப்பாணம், ஒக். 17*

*யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குலேந்திரன் . சிவராம் என்பவரே பேரவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.*

*உடனடியாகச் செயற்படும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட இந்த நியமனம் தொடர்பான அறிவித்தல் நேற்றுப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டது.*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 444(1) (ஸஷ்ஷ்) க்கு அமைவாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் பேரவைக்கு பதவிவழி உள்வாரி உறுப்பினர்களாக நியமனமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஒன்று அதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுவது வழமையாகும்.*

*அதன் பிரகாரம் கடந்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவையில் இருந்த 14 உள்வாரி உறுப்பினர்களுக்கு ஈடாக 15 வெளிவாரி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.*

*அதன் பின் இந்த வருட முற்பகுதியில் இந்து கற்கைகள் பீடம் புதிதாக உருவாக்கப்பட்டதன் காரணமாக, உள்வாரியாக அதன் பீடாதிபதி உள்வாங்கப்பட்டதனால்,அதனைச் சமப்படுத்தும் வகையில் புதிதாக வெளிவாரி உறுப்பினர் ஒருவரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமித்திருக்கிறது. (ஐ)*





"தோட்டாவை விட வலிமையானது வாக்குசீட்டு"
ஆபிரகாம் லிங்கன்
"THE BALLOT IS STRONGER THAN THE BULLET"
Abraham Lincoln



| | DISTRICTS | DATES |
|---|---|---|
| NORTH | Mullaithivu | 18th October 2019 |
| | Kilinochchi | 19th October 2019 |
| | Jaffna | 20th October 2019 |
| | Mannar | 21st October 2019 |
| | Vauniya | 22nd October 2019 |
| EAST | Batticaloa | 25th October 2019 |
| | Trincomalee | 26th October 2019 |
| | Ampara | 27th October 2019 |
| CENTRAL | Kandy | 1st November 2019 |
| | Matale | 2nd November 2019 |
| | Nuwara Eliya | 3rd November 2019 |


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2019 இல் வெளியிடப்பெற்றது.